**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-8** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | :மருத்துவர் திரு.சங்கர் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02nd day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ்**, 4** ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம்சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.02.2018 அன்று இதே மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது, பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கில் இறந்துபோன ஆண்பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக

பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில், தலைமைக்காவலர் திரு.குமார் என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்ட, அன்றைய தினம் பிற்பகல் 1.45 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய தொடங்கினேன். பிரேதம் சுமாரான ஊட்டச்சத்துள்ள நிலையில் காணப்பட்டது. பிரேத விரைப்புத்தன்மை உடல் முழுவதும் நீங்கியிருந்தது. பிரேதத்தில் வலது முன்னங்கையில் முன்புறம் மற்றும் பின்புறம், வலது கை, இடது கை, இடது கால், இடது முன்னங்கையின் முன்புறம் மற்றும் பின்புறம், நெஞ்சுப்பகுதி மற்றும் வயிற்றுப்பகுதியில் முன்புறம் மற்றும் பின்புறம் தோல் உரிந்த நிலையில் காணப்பட்டது.

<u>பிரேதத்தில் பின்வரும் காயங்கள் காணப்பட்டன.</u>

காயம் எண்.1 : 25 x 4 – 6 cm x எலும்பு ஆழத்திற்கு சாய்வான பிளந்த காயம் வலதுபக்க கன்னத்திலிருந்து வலது கண்ணிற்கு 2 செ.மீ. கீழாக வலதுபக்க தலையின் பின்பகுதியில் பின்புற தலையின் மையப்பகுதியில் மேல்பக்கம் காணப்பட்டது. அந்த காயமானது வலது காது மடலை இரண்டாக வெட்டியிருந்தது. காயத்தின் விளிம்புகள் சீராக இருந்தன.

காயம் எண்.2 : 16 x 2 – 3 cm x எலும்பு ஆழம் வரை பிளந்த காயம் அதன் அடிப்பகுதியில் உள்ள உடைந்த எலும்புகளை வெளிநோக்கி காணப்பட்டது. அந்த காயமானது இடதுபக்க கன்னத்திலிருந்து வலதுபக்க தாவாக்கட்டைவரை 7 செ.மீ. இடது காதுக்கு கீழ் காணப்பட்டது. காயத்தின் விளிம்புகள் சீராக இருந்தன.

காயம் எண். 3 : 17 x 4 – 8 cm x எலும்பு ஆழத்திற்கு பிளந்த காயமானது கழுத்துப்பகுதியின் முன்பகுதியில் காணப்பட்டது. அந்த காயத்தின் நடுப்பகுதியில் உடைந்த எலும்புகள், இரத்தக்குழாய்கள், நரம்புகள் மற்றும் சதைப்பகுதியை வெளிநோக்கி காணப்பட்டும், அந்த காயமானது மூச்சுக்குழல்

பகுதி மற்றும் வாய்பகுதி ஆகியவை வெட்டி காணப்பட்டது. அதன் விளிம்புகள் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. மேலும் கூறாய்வு செய்து பார்த்தபோது, காயத்தின் அடிப்பகுதியில் உள்ள மூச்சுக்குழாய் குருத்தெலும்புகள் உடைந்து காணப்பட்டது. நாவடி எலும்பு உடையாமல் இருந்தது.

காயம் எண். 4 : 8 x 2 – 4 cm x சதை ஆழத்திற்கு வெட்டுக்காயமானது இடது கையின் முன்புறத்தில் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

தலைப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்தபோது, தலைத்தோல், மண்டையோடு எலும்பு மற்றும் மூளையின் மேல்தோல் நல்ல நிலையில் காணப்பட்டது. மூளை சரியான அளவிலும், வெளிறியும் காணப்பட்டது. நெஞ்சுப்பகுதி கூறாய்வு செய்து பார்த்தபோது, இருதயம் சரியான அளவிலும், அதன் உள்பகுதியில் உறைந்த இரத்தமும் காணப்பட்டது. வால்வுகள் மற்றும் இரத்தக்குழாய்கள் நல்லநிலையில் இருந்தன. நுரையீரல்கள் சரியான அளவிலும் இருந்தது. அதனை கூறாய்வு செய்து பார்த்தபோது வெளிறி காணப்பட்டது. வயிற்றுபகுதியை கூறாய்வு செய்துபார்த்தபோது, இரைப்பையில் 20 மில்லி பச்சைநிற திரவம் காணப்பட்டது. குடல்பகுதி காற்றினால் விரிவடைந்திருந்தது. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சீறுநீரகங்கள் சரியான அளவில் காணப்பட்டது. அவைகளை கூறாய்வு செய்து பார்த்தபோது வெளிறி காணப்பட்டது. சிறுநீர்பை காலியாக இருந்தது. இடுப்பெலும்பு உடையாமல் இருந்தது. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு, இராசயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இறுதி கருத்து :- எனது பிரேத பரிசோதனையிலிருந்து இறந்துபோன நபர், அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களினாலும், அந்த காயங்களினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கின் காரணமாகவும் இறந்திருக்க வாய்ப்புள்ளது என கருத்துரை வழங்கி, சான்று வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.13.

இறந்துபோனவரின் உடல்உள்ளுறுப்புகளை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தி கிடைத்த விஷரா அறிக்கை நீ.ம.சா.ஆ.1. நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில், இறந்தவரின் உடல் உள்ளுறுப்புகளில் எந்த நச்சுத்தன்மையும் இல்லை என அறிக்கை பெறப்பட்டது.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

பிரேதத்தில் காணப்பட்ட 1 முதல் 4 காயங்கள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.8 மற்றும் சா.பொ.12 அருவாள்களால் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | | |
| | : | Prosecution - | **PW-9** | |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | :முருகானந்தம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02nd day of July 2024.

**(1**ம் எதிரி கனகராஜ், **2**ம் எதிரி சந்தோஷ்குமார், **3**ம் எதிரி பிரகாஷ், **4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

<u>முதல் விசாரணை</u>

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது கரூர் மாவட்ட துப்பறியும் மோப்பநாய் படைப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 10.02.2018 அன்று இதே பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து ஸ்டெபி என்ற துப்பறியும் நாய்க்கு பயிற்சியாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம், கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப்பிரிவு உத்தரவுப்படி, பசுபதிபாளையம் .............

கா.நி.கு.எண். 82/2018 வழக்கின் சம்பவ இடமான பி.வெள்ளாளப்பட்டி, கீரிக்கல்பாதையில் உள்ள தங்கவேல் என்பவரின் தோட்டத்திற்கு பி.ஹனீப் என்ற காவலர் மற்றும் துப்பறியும் நாய் ஸ்டெபி ஆகியோருடன் இரவு 19.15 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் கிடந்த சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஆண்பிரேதத்தின் மீது துப்பறியும் நாயை மோப்பம் பிடிக்க செய்து, கிழக்கு பக்கமாக மண்பாதையில் சென்று, பின்னர் வலதுபக்கம் திரும்பி தெற்கு நோக்கி சுமார் 1 கி.மீ. சென்று, பி.வெள்ளாளப்பட்டி மண்பாதை பிரிவு ரோட்டின் அருகே நின்றுவிட்டது.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-10** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | :பாபு | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02nd day of July 2024.

**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**, 4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது கரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள தனிப்பிரிவில் கணிணி சம்மந்தப்பட்ட மற்றும் செல்போன் உள், வெளி அழைப்பு விவர அறிக்கை பெற்றுதருவது சம்மந்தப்பட்ட காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த, 23.06.2020 அன்று, பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்து, அயல்பணியில் கரூர் மாவட்ட .........

கண்காணிப்பாளர் அலுவலக தனிப்பிரிவில் இதே பணியில் இருந்தபோது, பசுபதிபாளையம் வட்ட காவல் ஆய்வாளர் பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கு சம்மந்தப்பட்ட சம்பவஇட dumbp டவர் அறிக்கை கேட்டு, கொடுத்த விண்ணப்பத்தின்பேரில், தனிப்பிரிவு கொடுத்த உத்தரவின்பேரில், செல்போன் நிறுவனங்களின் நோடல் அதிகாரிகளுக்கு அனுப்பி, நோடல் அதிகாரிகளிடமிருந்து dumbp டவர் அறிக்கை பெற்று, ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன்.

இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-11** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | :சக்கரைபாவா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02nd day of July 2024.

**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**, 4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 27.02.2021 அன்று, பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வந்தபோது, பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதின்பேரில், நானும், தலைமைக்காவலர் 946 வேல்முருகன் .......

என்பவரும், திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் பகுதி, கணக்கம்பாளையம் பிரிவிற்கு சென்று, ஆய்வாளர் எங்களிடம் கொடுத்த புகைப்படத்தை காண்பித்து, அதில் உள்ளவர் யாரென்று விசாரித்ததில், அங்கு ரோட்டில் நின்றுக்கொண்டிருந்த ராஜேஸ்குமார் அவரது அம்மா லோகநாயகி ஆகியோரிடம் கேட்டபோது, அந்த புகைப்படத்தில் உள்ளவர் சுப்புராஜ் என்று சொன்னார்கள். மேலும், சுப்புராஜ் தனது கடைக்கு அருகில் கூல்ட்ரிங்ஸ் கடை வைத்திருந்தார் என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக நான் காவல்நிலையத்திற்கு வந்து, ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன்.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-12** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | :குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02nd day of July 2024.

**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**, 4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.02.2018 அன்று பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது, ஆய்வாளர் உத்தரவின்படி, பசுபசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கில் பதிவு செய்யப்பட்ட துரித முதல்தகவல் அறிக்கையை ........

ஆய்வாளரிடம் கடவுச்சீட்டு பெற்று, கரூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு வந்தபோது, நீதிமன்றம் விடுமுறையில் இருந்ததால், பசுபதிபாளையத்தில் உள்ள நீதிபதியின் குடியிருப்பிற்கு சென்று, நீதித்துறை நடுவர் எண்.1 கரூர் அவர்களிடம் தபாலை ஒப்படைத்து, காவல்நிலையம் திரும்பினேன்.

பின்னர், 16.02.2018 அன்று பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி, கரூர், அரசு மருத்துவமனை சென்று, அங்கு சவக்கிடங்கிலிருந்த ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். பின்னர், மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு, ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன், சுமார் 25 – 30 வயது மதிக்கக்தக்க பிரேதத்தை கூறாய்வு செய்வதற்காக மருத்துவரிடம்அறிக்கை செய்து, பிரேதத்தை அடையாளம் காட்டி ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு, இறந்துபோன நபர் யாரென்று அடையாம் தெரியாத காரணத்தினால், கரூர் நகராட்சி மயானத்தில் பிரேதத்தை அடக்கம் செய்ய ஆய்வாளரிடம் வேண்டுகோள் கடிதம் பெற்று, கரூர் நகராட்சிக்கு சொந்தமான மயானத்திற்கு சென்று, இறந்தவரின் பிரேதத்தை நல்லடக்கம் செய்து, ஒப்புகை சீட்டு பெற்று, பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட நீலநிற ஜீன்ஸ் பேண்ட், ரோஸ் நிற சட்டை, பூமக்ஸ் என்று எழுதப்பட்ட ஜட்டி ஆகியவற்றை நிலையம் திரும்பி, ஆய்வாளரிடம் ஒப்படைத்து, தனியறிக்கை செய்தேன். நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்த நீலநிற ஜீன்ஸ் பேண்ட், ரோஸ் நிற சட்டை, பூமக்ஸ் என்று எழுதப்பட்ட ஜட்டி நீதிமன்றத்தில் உள்ளது. அவை முறையே சா.பொ.13 முதல் 15.

பின்னர் 15.03.2018 அன்று பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதம் பெற்று, திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து, ஒப்புகை சீட்டு பெற்று, நிலையம் வந்து, அறிக்கை செய்தேன்.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-13** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | :சகாயராணி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 02$^{nd}$ day of July 2024.

**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**, 4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பெண் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.04.2021 அன்று, பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். காவல்நிலையத்தில் உள்ள கணிணியில் தட்டச்சு பணிகளை செய்து வந்தேன். அன்றைய தினம் நான் பாரா

பணியிலிருந்தபோது, காலை 11.00 மணிக்கு பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் அழைத்ததின்பேரில், காவல்நிலையத்திற்கு சென்றேன். பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி கனகராஜ் என்பவரை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலையத்திலிருந்த கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்து, ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

அன்றைய தினம், பிற்பகல் 3.00 மணிக்கு எதிரி சந்தோஷ்குமார் என்பவரை தெரசா கார்னர் அருகில் வைத்து ஆய்வாளர் விசாரித்தபோது, எதிரி சந்தோஷ்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலைய மடிக்கணிணியில் தட்டச்சு செய்து, காவல்நிலையத்திற்கு திரும்பி வந்து, காவல்நிலையத்தில் உள்ள பிரிண்ட் எடுத்து, ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

பின்னர், 12.04.2021 அன்று நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் இருந்தபோது, காலை 11.30 மணியளவில், எதிரி அழகுலெட்சுமி என்பவரை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலையத்திலிருந்த கணிணியில் தட்டச்சு செய்து, நகல் எடுத்து, ஒப்படைத்தேன்.

பின்னர், அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு அதே வழக்கு சம்மந்தப்பட்ட எதிரி பிரகாஷ் என்பவரை பசுபதீஸ்வரர் கோவில் பின்புறம் வைத்து ஆய்வாளர் விசாரித்தபோது, எதிரி பிரகாஷ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலைய மடிக்கணிணியில் தட்டச்சு செய்து, காவல்நிலையத்திற்கு திரும்பி வந்து, காவல்நிலையத்தில் உள்ள பிரிண்ட் எடுத்து, ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

மேலும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட சாட்சிகளை ஆய்வாளர் விசாரித்தபோது, ஆய்வாளர் உத்தரவுப்படி, வாக்குமூலங்களை கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்து, ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.